# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 05.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 9231/E/2018**

திரு கோ.இராசதுரை ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
கூட்டுறவு சங்கங்களின் துணைப்
பதிவாளர் அலுவலகம்,
கூட்டுறவுத்துறை,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 23.08.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 20.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 04.12.2018 |

******

**ஆணை**

இன்று (05.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு கோ.இராசதுரை ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு S.R.தமிழரசன், கூட்டுறவு சார்பதிவாளர், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகம், கூட்டுறவுத்துறை, சிதம்பரம், கடலூர் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 23.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 1988ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் விதி எண்.52-ன் படி இ.2684 நந்தீஸ்வரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட் நிர்வாக குழு உறுப்பினர்களின் தேர்தலில் இ 2684 நந்தீஸ்வரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உறுப்பினர்கள் வாக்களித்த வாக்கு சீட்டின் வாக்கு எண்ணுகை வாக்கு சீட்டு வ.எண்.25 எண்ணுகைக்கான வேட்பாளருக்க ஒதுக்கப்பட்ட வரிசை எண்.34 வேட்பாளருக்கான 1298 வாக்கு சீட்டு எண்ணுகை கணக்கிடப்பட்ட வாக்குபதிவு எண்ணிக்கைத்தாள் நகல், இ.2684 நந்தீஸ்வரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட் நிர்வாக குழு உறுப்பினர் தேர்தல் வாக்கு எண்ணுகை விபரம் சங்க அலுவலகத்தில் தேர்தல் அலுவலரால் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்ட நகல் என 4 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், சிதம்பரம் சரக கூட்டுறவு சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர், சிதம்பரம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 03.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 20.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், இணைப்பதிவாளர் அலுவலகம், கடலூர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவானது 10.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், துணைப் பதிவாளர், சிதம்பரம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 04.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (05.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 30.08.2018 மற்றும் 17.10.2018 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான கூட்டுறவு சார்பதிவாளர், துணைப்பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் அவர்கள், மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய தகவல்களை 15 தினங்களில் வழங்குவதாக எழுத்துமூலமாகத் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது.

**மேல்முறையீட்டாளர் 23.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத்**

**தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது**.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 9231/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
கூட்டுறவு சங்கங்களின் துணைப்
பதிவாளர் அலுவலகம்,
கூட்டுறவுத்துறை,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு கோ.இராசதுரை,
த/பெ. கோவிந்தசாமி,
வள்ளலார் தெரு,
வட்டத்தூர்,
ஸ்ரீமுஷ்ணம் வட்டம்,
கடலூர் மாவட்டம் - 608 702.

Copy to: Judgement File.
*“VP / PA -06.09.19”*